1978 மார்ச் 4]

மின்னல் கிராமத்தில் அரிசனங்களுக்கு வீடுகள்.

*வினா 393 : திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வடாற்காடு மாவட்டம், அரக்கோணம் வட்டம், மின்னல் கிராமத்தில் 8—1—1961-லேயே மனைப்பட்டா பெற்றுக் கொண்ட அரிசனங்கள் இன்னும் வீடு கட்ட முடியால் இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதன்பேரில் எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : (அ) தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டம், அரக்கோணம் வட்டத்திலுள்ள மின்னல் கிராமத்தில் 1961-ம் ஆண்டிலேயே 31 அரிசனக் குடும்பங்களுக்கு 2·66 ஏக்கர் நிலப்பரப்பு வீட்டுமனைக்காக ஆர்ஜிதம் செய்யப்பெற்று மனைகள் வழங்கப்பட்டன. எனினும் அவர்களால் பொருளாதார வசதிகள் இல்லாததால் வீடுகள் கட்ட இயலவில்லை.

(ஆ) மேற்கண்ட கிராமத்தில் வீடுகள் கட்டுவதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி 1977—78-ற்கான அரிசன வீட்டு வசதித் திட்டம் பற்றி அரசு ஆணை வழங்கப்பட்ட பின் பரிசீலிக்கப்படும்.

திரு. எஸ். ஜே. இராமசாமி : தலைவர் அவர்களே, 1961-லே போடப்பட்ட இந்த அரிசனங்களுக்கு வீடு கட்டக் கூடிய பிரச்னை இது வரையில் நீண்டு கொண்டு இருக்கிறது. அது கோர்ட்டுக்குப் போய் தடை செய்யப்பட்டு கோர்ட்டுகளின் மூலமாகத்தான் தடையாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அப்படியானால் கோர்ட்டு நடவடிக்கைகளை நீக்கி இதை எடுத்துக்கொள்ள இந்த அரசு தீவிரமாக முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, அந்த நிலையெல்லாம் கடந்து, பட்டா வழங்கப் பட்டு விட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது அரக்கோணம் வட்டம் மின்னல் கிராமத்தைப் பற்றிய கேள்வி. கையைத் தூக்கிக் கொண்டிருக்கிறவர்களுக்கும் மின்னல் கிராமத்திற்கும் சம்பந்தம் இல்லை. தயவு செய்து மின்னல் கிராமம் சம்பந்தப்பட்ட விஷயமாகக் கேளுங்கள்.

திரு. சி. மாணிக்கம் : தலைவர் அவர்களே, அரிசனங்களுக்கு வீடுகட்டும் திட்டம் மூலமாகக் கட்டப்பட்ட வீடுகளில், ஏற்கெனவே உள்ள வீடுகளின் வடிவமைப்பை மாற்றி அமைக்கும் திட்டம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, ஏற்கெனவே கட்டிய வீடுகளின் வடிவமைப்பை மாற்றி அமைக்க வேண்டும் என்றுதான் அரசாங்கம் தீவிரமாக பரிசீலனை செய்தது. முன்பு 4,000 ரூபாயில் 207 சதுர அடியில் வீடுகள் கட்டப்பட்டன. இந்த அரசாங்கம் 237 சதுர அடியில் 6,000 ரூபாயில் வீடு கட்ட முடிவு செய்திருக்கிறது என்று குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. க. மருதாசலம் : தலைவர் அவர்களே, அரிசனங்கள் பொருளாதார வசதியில்லாத காரணத்தால் அரசாங்கம் அளித்த மனைகளில் வீடு கட்ட முடியாமல் இருக்கிறார்கள். எனவே அரசு கூடுதலாக நிதி ஒதுக்கி அதிக அளவில் வீடுகள் கட்டித்தர ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இன்றைக்கு இருக்கிற நிதி நிலைமை காரணமாக குறைவாக நிதி ஒதுக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. நிதி ஆதாரம் அதிகரிக்குமானால் இந்தக் கோரிக்கையை அரசு செயல்படுத்தும்.

திரு. துரை முருகன் : தலைவர் அவர்களே, முன்பெல்லாம் இந்த அரிசனங்களுக்கு 4,000 ரூபாயில் வீடு கட்டிக் கொடுத்தார்கள். இப்போது 6,000 ரூபாயிலே அதிகமான இடத்திலே கட்டி கொடுக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இந்த 6,000 ரூபாயிலே எவ்வளவு வீடுகள் நீங்கள் கட்டிக் கொடுத்திருக்கிறீர்கள், இது ஒன்று.

இரண்டாவது, அரிசனங்களுக்கு வீடு கட்டுவதற்காக 2 கோடி ரூபாய்கள், நிதி நிலை அறிக்கையிலே அறிவிக்கப்பட்டது. ஆனால் அதற்கான அரசாங்க ஆணை இன்னும் பிறப்பிக்கப்படவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குற்றம் சாட்டினார்கள். ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டதுன் என்கிற விவரத்தை அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டும் எறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, அதிகமான வீடுகள் என்று நான் சொல்லவில்லை. வீடு ஒன்றுக்கு ஆகும் கட்டிடச் செலவு தொகையைக் கூடுதலாக ஆக்கியிருக்கிறோம். ஆணை பிறப்பிக்க ஏன் தாமதம் என்று கேட்டார். இந்த வீட்டில் வடிவ அமைப்பை மாற்றி அமைப்பது, ஒரு வீட்டுடுக்கு எவ்வளவு தொகை ஒதுக்குவது, என்பது பற்றி ஆர அமர யோசித்து செய்ய வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதன் காரணமாகத்தான் ஆணை பிறப்பிப்பதில் தாமதம் ஆகிறது.

திரு. துரை முருகன் : தலைவர் அவர்களே, நான் கேட்ட கேள்விக்குச் சரியான பதில் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் கேட்ட கேள்விக்கு இப்படித்தான் பதில் சொல்ல வேண்டும் என்று அமைச்சரைக் கட்டாயப் படுத்த முடியாது. உங்களுக்குத் தெரியும் (குறுக்கீடு) கட்டாயப்படுத்த முடியாது என்று சொன்னேனே தவிர வேறல்ல.

திரு. துரை முருகன் : அதற்காக பொறுப்பில்லாமல் எதை வேண்டுமானாலும் பதிலாகச் சொல்லலாமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அமைச்சர்களைக் கட்டாயப்படுத்த முடியாது. இப்படித்தான் பதில் சொல்ல வேண்டும் என்று சொல்ல முடியாது. இது உங்களுக்குத் தெரியும்.

திரு கா. வே. கந்தசாமி : மாமன்றத் தலைவர் அவர்களே, 1974-75-லே தமிழ் நாட்டில் பல பகுதிகளில் அரிசனங்களுக்கு அதிகமான வீடுகள் கட்டப்பட்டது என்று சொல்கிறார்கள். என்னுடைய தொகுதியில் 3 இடங்களில் 70, 80 வீடுகளைக் கட்டிக்கொடுத்திருக்கிறார்கள். அந்த வீடுகளில் அரிசனங்களே குடியிருப்பது இல்லை. மேலும் கூரை, மற்றும் கான்கிரீட் அனைத்தும் கீழே விழுந்து கொண்டு இருக்கிறது. அதைப் பழுதுபார்த்துக் கொடுக்கும்படி அரிசன நல இலாகா அமைச்சரை இந்த கேள்வி நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல, அப்படிப்பட்ட நிலைமை சில ஊர்களிலே இருப்பதாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. அந்த பழுதுபட்ட வீடுகளைச் சீர்படுத்துவதற்கு இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது.

Harijan Colony at Chettikurichi

*394—Thiru A. R. MARIMUTHU : Will the Hon. the Minister for Haijan Welfare be pleased to state.

(a) Whether the acquisition of lands for the construction of Harijan Colony at Chettikurichi Village. Aruppukkotai taluk, Ramnad district has been completed .

(b) if not, when it will be completed, and

(c) the reasons for the delay ?